25.07.2025

அ.வ.எண். 140/2019

வா.சா.3 - பழனிச்சாமி, த/பெ. ரங்கன்

Solemnly affirmed and sworn by Tmt.R.Lakshmi, Junior Assistant on 25.07.2025 is accordance with the provision of Act X of 3331

1 முதல் 4 மற்றும் 8 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1. எனக்கு சொந்த ஊர் காங்கேயம்பாளையம் ஆகும். அங்கு நான் 43 ஆண்டுகளாக வசித்து வருகிறேன். எனக்கு 61 வயது ஆகிறது. இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் குடும்ப பிரச்சனை என்று சொன்னார்கள். இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க அழைப்பாணை வரவில்லை, வழக்கறிஞர் சொன்னார். எனக்கு திருமணம் ஆகி, 3 பிள்ளைகள் உள்ளனர். என் மனைவி பெயர் அருக்காணி. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.

2. வாதிகள், காங்கேயம்பாளையத்தில் வசித்து வருகின்றனர். வாதிகள் அங்கு வசிக்கவில்லை என்றால் சரியல்ல. வாதிகள் எத்தனை ஆண்டுகளாக அங்கு வசித்து வருகிறார்கள் என்றால் நான் செல்வதற்கு முன்பிருந்தே அங்கு தான் வசிக்கிறார்கள். 1ம் வாதியின் கணவர் ஜெகன்நாதனை எனக்கு தெரியும். பெண் வீட்டார் பத்திரிக்கை வைத்தனர், நான் சென்றேன். ஜெகன்நாதனை திருமணத்திற்கு முன்பு தெரியாது, திருமணத்திற்கு பின்னிட்டு தான் தெரியும். ஜெகன்நாதன் என்ன படித்துள்ளார் என்று எனக்கு தெரியாது, அவர் லாரி டிரைவர்.

3. ஜெகன்நாதன் இறந்த தேதி தெரியாது. 11 வருடங்களுக்கு முன்பு இறந்தார். ஜெகன்நாதன் இறக்கும்போது எந்த முகவரியில் வசித்து வந்தார் என்றால் மாமனார், மாமியாருடன் காங்கேயம்பாளையத்தில் வசித்து வந்தார். ஜெகன்நாதன், 227 சென்னியாண்டவர் கோவில் வீதி, கருமத்தம்பட்டி, 641659 என்ற முகவரியில் வசித்து வந்தார் என்றால் எனக்கு தெரியாது. இந்த வழக்கில் 8 ம் பிரதிவாதி ஜோதி (எ) ஜோதிமணியை தெரியாது, அவரது கணவர் பெயரும் தெரியாது.

4. நான் 1ம் பிரதிவாதிக்கு உறவினர் அல்ல. நான் வார்டு உறுப்பினர் ஆக

இருந்தேன். திருமணத்திற்கு யார் யார் சென்றோம் என்றால் நானும், என் மனைவியும் சென்றோம். திருமண தேதி தெரியாது. சரோஜினி என்ன வேலை செய்கிறார் என்றால் வீட்டில் தான் இருக்கிறார். ஜெகன்நாதனுக்கு ஒரு மகன் உள்ளார். ஜெகன்நாதனுக்கு ஜோதி என்கிற மனைவியும், புவனேஸ்வரி, காயத்ரி, சௌந்தர்யா ஆகியோர் மட்டும் தான் வாரிசுகள் என்றால் சரோஜினியை திருமணம் செய்து மகன் உள்ளது தெரியும். 2 வது திருமணம் செய்தது பற்றி எனக்கு தெரியாது.

5. ஜெகன்நாதன் பெயரில் சொத்து உள்ளதா என்றால் எனக்கு தெரியாது. ஜெகன்நாதனின் இறப்பு நிகழ்ச்சி எங்கு நடந்தது என்றால் கோவை அரசு மருத்துவமனைக்கு சென்று பார்த்துவிட்டு வந்தேன். பிரமாண வாக்குமூலத்தில் ஜெகன்நாதனின் இறப்பு நிகழ்ச்சிக்கு சென்றதாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. ஜெகன்நாதனின் தந்தை இறந்த தேதி தெரியாது. ஜெகன்நாதனின் தந்தை இறப்பு நிகழ்ச்சிக்கு சென்றதாக சொல்லியுள்ளேன், எலச்சிபாளையத்திற்கு சென்றேன். ஜெகன்நாதனின் தந்தை கருப்பசாமி எலச்சிபாளையத்தில் இல்லை என்றால் சரியல்ல.

6. ஜெகன்நாதனுக்கு 8 ம் பிரதிவாதி ஜோதி (எ) ஜோதிமணி என்ற மனைவியும், புவனேஸ்வரி, காயத்ரி, சௌந்தர்யா ஆகிய மகள்கள் தான் வாரிசுகள் என்றால் சரியல்ல. சரோஜினியை திருமணம் செய்தது தான் தெரியும். ஜெகன்நாதன் நெஞ்சு வலியில் இறந்துவிட்டார். ஜெகன்நாதன் விபத்தில் இறந்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனக்கு வழக்கு விவரம் தெரியாமல் பொய்யாக சாட்சியம் அளித்து வருகிறேன் என்றால் சரியல்ல. ஜெகன்நாதனின் இறப்பு நிகழ்ச்சியில் அவரது மனைவியாக யார் சடங்குகள் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நான் மருத்துவமனையில் தான் பார்த்தேன்.

7. நான் வார்டு உறுப்பினராக இருந்ததால் எனக்கும், வாதி சரோஜினிக்கும் தவறான தொடர்பு உள்ளதால் ஜெகன்நாதனின் மூதாதையர் சொத்தை அபகரிக்க வேண்டி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சரோஜினி எனக்கு தங்கை முறை. ஜெகன்நாதனுக்கு, 8 ம் பிரதிவாதியும், 1 முதல் 4 பிரதிவாதிகள் மட்டும்

தான் உண்மையான சட்டப்படியான வாரிசுகள் என்பதை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல, தாவா தள்ளுபடி ஆக வேண்டும் என்றால் சரியல்ல.

**6 மற்றும் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1. வாதி எதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதி முதல் மனைவி என்று வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதி அவரது கணவர் இறந்துவிட்டார், இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளார். ஜெகன்நாதன் 11 ஆண்டுகளுக்கு முன்பே இறந்துவிட்டார். ஜெகன்நாதனின் இறப்பிற்கு நான் மருத்துவமனைக்கு சென்றேன். ஜெகன்நாதனுக்கு வாதி மட்டும் தான் ஒரே மனைவி ஆவார். ஜெகன்நாதனுக்கு ஒரே மகன் உள்ளார்.

2. நான் வாதிக்கு என்ன உறவு என்றால் அண்ணன் - தம்பி மாதிரி பழகுவேன். பழக்கம். நான் வாதிக்கு அறிமுகம் ஆனவர் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

**வாதி தரப்பில் மறுவிசாரணை**

1. வாதியின் திருமணத்திற்கு சென்றபோது ஜெகன்நாதனின் குடும்பத்தார் அனைவரும் இருந்தனர். ஜெகன்நாதனின் உடன்பிறந்த சகோதரர்களும் வந்திருந்தார்கள். வாதியின் திருமணத்திற்கு வந்தவர்கள் யாராவது இங்கு உள்ளார்களா என்றால் 1 முதல் 5 மற்றும் 8 பிரதிவாதிகளின் வழக்கறிஞரை காட்டி இவரும் தான் திருமணத்திற்கு வந்தார் என சாட்சி, சாட்சியம் அளிக்கிறார்.

**மறுகுறுக்கு விசாரணை இல்லை.**

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd/.M.Santhosham
District Munsif, Sulur